අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/01/101/02/02/01-2019 — ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. — දිනය / திகதி / Date 2019.05.29

சுற்றறிக்கை இலக்கம் : 36/2018 (1)

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல மாகாண/ வலய கணிதப் பாட பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,,
சகல பிரிவெனாப் பொறுப்பாளர்கள்.
சகல அதிபர்கள்,

**அகில இலங்கை கணிதப் போட்டித் தொடர்**

மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 2018.09.18 ஆம் திகதிய அமைச்சு சுற்றறிக்கை 36/2018 தொடர்பில் தங்களது கவனத்தை ஈர்க்கச் செய்கிறேன்.

இச் சுற்றறிக்கையின் 3.2 உப ஆவணம் மற்றும் 3.3 இல் 3.3.1 உப வாசகத்தின் போட்டிக் கட்டம் 04 (Maths Quiz) வாசகத்தை கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு மறுசீரமைக்கிறேன்.

3.2. பங்கேற்பு

சிரேஷ்ட - 2 போட்டிப் பிரிவிற்காக பங்கேற்கச் செய்ய வேண்டியது எதிர்வரும் ஆண்டுகளில் க.பொ.த (உ.த) பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றும் பாடசாலை மாணவர்கள்.

**போட்டி கட்டம் 04 (Maths Quiz)**

இப் போட்டி 90 நிமிடத்திற்கு நடைபெறுவதுடன் இரண்டு சுற்றுப் போட்டிகள் நடைபெறும். இப்போட்டியில் பங்கேற்க முடிவது அணியின் ஆறு பேருக்கு மாத்திரமாகும். ஏனைய மாணவர்கள் மேலதிக போட்டியாளர்களாகும். ஒரு போட்டியாளருக்கு ஒரு சுற்றில் ஒரு கேள்வி வீதம் 2 சுற்றுக்கள் நடைபெறும். ஒரு போட்டிற்காக மூன்று குழுக்கள் வீதம் மூன்று இடங்களில் நடைபெறும்.

அத்துடன் 36/2018 சுற்றறிக்கையின் ஏனைய நிபந்தனைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் மாற்றமின்றி இருக்கும்.

திஸ்ச ஹேவாவிதான,
செயலாளர் (ப.க)
கல்வி அமைச்சு